கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

கலைகலாசார பீடம்

மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு
2010/2011 (MARCH 2015)

PHYS- **3203** – விமர்சனக் கோட்பாடும் அதன் மெய்யியல் தொடர்பும்

**(Critical Theory and Its Relevance to Philosophy)**

01 JUN 2015

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து ஏதேனும் மூன்று வினாக்களுக்கும், பகுதி II இல் இருந்து ஏதேனும் ஒரு வினாவிற்குமாக மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக

---

பகுதி-I

01. அ) "விமர்சனக் கோட்பாட்டின் பிரதான இலக்கு தனிநபரின் மகிழ்ச்சியாகும்" இக்கூற்றினை ஆராய்க. (09புள்ளிகள்)

ஆ) பௌதீக அதீதம் மனித வாழ்வினைப் புரிந்து கொள்வதற்கு பொருத்தமுடையதாக உள்ளது என ஹோர்க்கைமர் கருதக் காரணங்கள் யாவை? விளக்குக. (08புள்ளிகள்)

இ) "விமர்சனக் கோட்பாடு மாக்ஸிசத்தினை தொடக்கமாகக் கொண்டாலும் மாக்ஸிசத்தினை விமர்சிக்கின்ற கோட்பாடாகவே வளர்ச்சியடைந்துள்ளது" இக்கூற்றினை விமர்சன ரீதியாக ஆராய்க. (08புள்ளிகள்)

02. அ) அடோர்னோவின் "ஆதிக்கம்" என்ற எண்ணக்கருவை முதலாளித்துவ சமூகத்தில் முக்கியத்துவம் பெறும் நிலைகளை உதாரணங்கள் கொண்டு விளக்குக. (09புள்ளிகள்)

ஆ) நேர்க்காட்சி விஞ்ஞானங்களை ஹொர்க்கைமர் விமர்சிப்பதற்கான காரணங்களை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க. (08புள்ளிகள்)

இ) "கட்டுக்கதையின் பரிணாமமே அறிவொளியாகும்" இக்கூற்றினை விமர்சன ரீதியாக ஆராய்க. (08புள்ளிகள்)

03. அ) முதலாளித்துவ சமூகம் பற்றிய லூகாஸ் மாக்ஸின் விளக்கங்களிலிருந்து எவ்வகையில் அடோர்னோவின் விளக்கம் வேறுபடுகின்றது என்பதை விளக்குக. (09புள்ளிகள்)

ஆ) ''பொருட்களின் தனித்துவம்'' என்ற விடயம் எவ்வாறு முதலாளித்துவ சமூகத்தில் செயற்படுகின்றது என்பதை எடுத்துக்காட்டுக்கள் கொண்டு விளக்குக. (08புள்ளிகள்)

இ) ''முதலாளித்துவ சமூகத்தில் கலை தனது சுயாதீன தன்மையை இழந்து ஒரு பண்டமாக மாறிவிட்டது'' என்ற அடோர்னோவின் கருத்துப் பற்றிய உமது விமர்சனங்களை எடுத்துக் கூறுக. (08புள்ளிகள்)

04. அ) திரைப்படம் மற்றும் புகைப்படம் என்பன கலையின் புதிய பரிணாமங்கள் எனக் கூறும் பெஞ்சமினின் கருத்துக்கள் ஏற்புடையவனவா உமது வாதங்களைத் தருக. (09புள்ளிகள்)

ஆ) தனிமனித துன்பத்தினைக் குறைத்து தனிமனித மகிழ்வினை அதிகரிக்கும் நோக்கில் எவ்வகையில் ஹொக்கைமரிலிருந்து ஹபமார்ஸ் வேறுபடுகின்றார் என்பதை எடுத்து விளக்குக. (08புள்ளிகள்)

இ) உயர்ந்த மொழித் தொடர்பாடலே தனிமனித இன்பத்திற்கு வழிவகுக்கும் என்ற ஹபமார்ஸின் வாதத்தினை விமர்சன ரீதியாக ஆராய்க. (~~7.5~~ 8 புள்ளிகள்)

## பகுதி –II

05. தற்கால சமூக முறைமைகளை ஹேபர்ட் மாக்கீயுஸ் விமர்சிப்பதற்கான காரணங்களை ஆராய்க. (25புள்ளிகள்)

06. அல்தூஸரின் மனிதத்துவ எதிர்வாதம் என்றால் என்ன என்பதை விளக்கி மாக்ஸிசம் பற்றிய அவரது கருத்துக்களை விளக்குக. (25புள்ளிகள்)